# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2114/1 - 2019 මාර්තු මස 11 වැනි සඳුදා - 2019.03.11

*2114/1 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 15/2014* (II)

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்**

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 57 ஆம் பிரிவின்கீழ் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,  
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்காகவும்  
அதன் சார்பிலும்.

கொழும்பு,  
2019, பெப்புருவரி 18.

விதிகள்

1. இவ்விதிகள் 2019 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (தீர்ப்பாளர்கள் பற்றிய இடாப்பு) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


1A - PG 4459 — 517 (2019/03)

**கவனிக்க.**- *2113/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 2113/68 ஆகும்.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. பணிப்பாளர் தலைமையதிபதி-

(அ) இதற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்டுள்ள தீர்ப்பாளர்கள் பற்றிய இடாப்பொன்று பேணப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அது கிரமமான முறையில் நாளது வரையாக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

3. (இதனகத்துப் பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு தீர்ப்பாளரும் அதிகார சபையினால் பேணப்பட்ட தீர்ப்பாளர்கள் பற்றிய இடாப்பில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

4. தீர்ப்பாளர்கள் பற்றிய இடாப்பு ஒரு விபரக்கொத்தாகவும் இணைய விபரக்கொத்தாகவும் பேணப்படுதல் வேண்டும் ; இது பொது மக்களினால் அணுகப்படக்கூடியதாதல் வேண்டும்.

## அட்டவணை

*தீர்ப்பாளர்கள் பற்றிய இடாப்பைப் பேணுவதற்கான படிவமும் முறையும்*

(விதி 2)

1. தீர்ப்பாளர்கள் பற்றிய இடாப்பு ஒரு விபரக்கொத்தாக அதிகார சபையினால் பேணப்படுதல் வேண்டும் ; இது, அதிகார சபையின் அலுவலகத்தில் கட்டணமின்றிப் பார்வையிடப்படுவதற்கும் அதிகார சபையின் இணையத்தளத்தில் ஓர் இணைய விபரக்கொத்தாகவும் கிடைக்கக்கூடியதாதல் வேண்டும்.

2. தீர்ப்பாளர்கள் பற்றிய இடாப்பு பின்வரும் விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும் ; இவை அத்தகைய விபரக்கொத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பதிவு பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் இணைய விபரக்கொத்துக்கும் தரவேற்றப்படுதலும் வேண்டும் :-

(அ) தீர்ப்பாளரின் நிழற்படம் ;
(ஆ) பதிவிலக்கம் ;
(இ) தீர்ப்பாளரின் பெயர் ;
(ஈ) தகைமைகள் :

(i) கல்விசார்
(ii) உயர் தொழில்சார்

(உ) விசேடித்த துறை :
(ஊ) முகவரி ;
(எ) தொலைபேசி இலக்கங்களும் மின்னஞ்சல் முகவரியும் ;
(ஏ) முதலாவது பதிவுத் திகதியும் நடப்புப் பதிவுக்காலப் பகுதியும்.

3. தீர்ப்பாளர்கள் பற்றிய இடாப்பு பின்வரும் சந்தர்ப்பங்களில் நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும் :-

(அ) ஒரு புதிய தீர்ப்பாளரைப் பதிவுசெய்தல் ;
(ஆ) பதிவுசெய்யப்பட்ட தீர்ப்பாளரொருவரின் பதிவைப் புதுப்பித்தல் ;
(இ) பதிவுசெய்யப்பட்ட தீர்ப்பாளரொருவரின் பதிவைப் புதிப்பிக்காதிருத்தல்.

*03-1216*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.